Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.202/2022, Cr.No.747/2020, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவராஜ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | தோரளி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சு.பள்ளிப்பட்டு | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 ) on the 16th day of May 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சண்டை சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

என்னுடைய ஊர் சு.பள்ளிப்பட்டு கிராமம். கண்ணுக்கவுண்டரின் மகன் இரத்தினம் என்னுடைய ஊரைச் சார்ந்தவரா என்றால் அவர் மிட்டூரைச் சார்ந்தவர் ஆனால், தற்போது சு.பள்ளிப்பட்டு கிராமத்தில் இருக்கிறார். அ.சா.1 ஜெயச்சித்ராவும் அதே ஊரைச் சார்ந்தவரா என்றால் சரிதான். எதிரி கார்த்திகேயனும் அதே ஊரைச் சார்ந்தவரா என்றால் சரிதான். எதிரி சோப்பு பவுடர் கடை வைத்து வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். ஜெயச்சித்ராவின் மகள் சுபா என்றால் சரிதான். கடந்த 08.05.2020 அன்று மாலை சுமார் 04.15 மணியளவில் நானும் கண்ணுக்கவுண்டர் மகன் இரத்தினம் என்பவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு எதிரே நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் அ.சா.1-னுடைய மகள் சுபா என்பவர் எதிரியின் வீட்டிலிருந்து

அழுதுக்கொண்டே அவர்கள் வீட்டிற்கு வந்தார். அப்போது நானும் இரத்தினமும் ஏன் அழுது கொண்டு வருகிறீர் என்று கேட்டதற்கு எதிரியானவர் தன்னை கட்டிப்பிடித்து தவறாக நடந்து கொண்டதாகவும் இதை வெளியில் சொன்னால் கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் எங்களிடம் சுபா கூறினார் என்றால் சரியல்ல, என்னிடம் சொல்லவும் இல்லை நான் பார்க்கவும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக உன்னுடைய அப்பா அம்மாவிடம் சொல்லிவிடுங்கள் என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் Cr.P.C. 161 வாக்குமூலத்தில் சம்பவம் குறித்து கூறிவிட்டு தற்போது எதிரியானவர் என்னுடைய ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு விரோதமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.